1994 ஏப்ரல் 6]

அந்த வண்டலூர் பூங்காவை நவீனமாக ஆக்குகிற முயற்சியில், அதற்காக ஆண்டுதோறும் 1-1/4 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அங்கே ஒரு 'ரெப்டைல் ஹவுஸ்'—பாம்புகள் போன்ற ஊர்வன இருப்பதற்காக, 'ரெப்டைல் ஹவுஸ்' அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. இரவு விலங்குகளுடைய கூடம் ஒன்று இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய என்ட்ரன்ஸ் காம்ப்ளெக்ஸ் சிறப்பாக்கப்பட்டிருக்கிறது. லைட்டிங் பெசிலிட்டீஸ் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல், மிருகங்களிடமிருந்து வருகிற கழிவுநீரை ஒரு சுகாதார சுற்றுப்புறத்தோடு வைப்பதற்காக அங்கே கழிவுநீரை அப்புறப்படுத்துகிற அற்புதமான இடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த அரசு, வண்டலூர் நவீன உயிரியல் பூங்காவைச் சிறப்பான ஒன்றாக அமைப்பதற்குப் பணி செய்து வருவதோடு, தமிழகத்தைப் பொறுத்தவரை, பல்வேறு தனியார்கள் கூட, நகரமன்றங்கள் போன்ற பல உயிரியல் பூங்கா சங்கங்கள் எல்லாம் அமைக்கிறார்கள். எனவே, அரசாங்கம் மட்டுமல்ல, ஓசூர் பகுதி என்பது தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்துள்ள பகுதி. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே மிகுந்த அக்கறை எடுத்து, தொழில் வல்லுநர்களை அணுகிச் செய்வார்களேயானால், தனியார்களே இப்படிப்பட்ட பூங்காக்களை அமைக்க முடியும். மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கோயிலைச் சார்ந்தவர்கள் இப்போது உயிரியல் பூங்கா ஒன்றை அமைக்க வேண்டுமென்று தமிழக அரசுக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அங்கே ஒரு வன உயிரியல் பூங்காவை உடனடியாக நிறுவுவதற்குரிய அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்காக எங்களைப் பணித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அவர்களுடைய உத்தரவை நாங்கள் சிரமேற்கொண்டு அங்கே உயிரியல் பூங்கா ஒன்றை அமைப்பதற்குத் தேவையான பணிகளைச் செய்து வருகின்றோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 217, திருமதி கே. மரியம் உல் ஆசியா; மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

217—

திருச்செங்கோட்டில் கண்ணகிக்கு பத்தினிக் கோட்டம் அமைத்தல்.

*** 23567—திருமதி கே. மரியம் உல் ஆசியா :**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோட்டில் கண்ணகிக்கு பத்தினிக் கோட்டம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுக்கம், பண்பாடு மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் பெண்ணினத்திற்கே பெருமை தேடித்தந்த கண்ணகிக்கு, திருச்செங்கோட்டிலே வருடா வருடம் மூன்று நாட்கள் தெய்வ வழிபாடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மேலும், தமிழறிஞர்கள், அங்கே சென்று பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகளையெல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உலகப் பெண்களுடைய தனிப்பெரும் தலைவியாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் பெண்ணின சமுதாயத்திற்குச் சிறந்த கலங்கரை விளக்கமாகவும் இருந்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய பொற்கால ஆட்சியில், கண்ணகிக்கு அங்கு ஒரு பத்தினிக் கோட்டம் அமைக்க அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யாரெல்லாம் போற்றப்பட வேண்டுமோ, யார் யாரெல்லாம் பெருமைப்படுத்தப்பட வேண்டுமோ, யாரெல்லாம் பெருமைக்கும், புகழுக்கும் உரியவர்களோ, அவர்களையெல்லாம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பெருமைப்படுத்தி வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளின் அடிப்படையில் இந்த ஆண்டு அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 218, டாக்டர் தே. குமாரதாஸ்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

218—

மாணவ, மாணவியரின் மருத்துவ ஆய்வுக் கட்டணத் தொகையை அரசுக் கருவூலம் மூலம் வரவு செலவு செய்தல்.

*** 20373—டாக்டர் தே. குமாரதாஸ் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா :-

உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளிடமிருந்து வசூல் செய்யப்படும் மருத்துவ ஆய்வுக் கட்டணத் தொகையினை அரசுக்